அறத்தான் வருவதே இன்பம்

# தமிழ் அறம்



உள்ளே...

ஆசிரியர் தலையங்கம் .................................. 1

நெஞ்சமே அஞ்சாதே நீ!

நண்பர்கள் எதற்காக?.......................................2

இல்லறம் இனிக்க..................................................3

மக்கள் சக்தி இயக்கம் .................................. 5

கவிதைகள். ........................................................ 6

சிந்தனை 8 செயல் 5 ஆசிரியர் மரு.த.இராசலிங்கம் ஏப்ரல் 2026

பண்புள்ள தமிழ்நெஞ்சங்களுக்கு வணக்கம்!

## தேர்தல்களம்

திரும்புகின்ற பக்கமெல்லாம் தேர்தல் பேச்சு
திருவிழாபோல் தேர்தலும்தான் தொடங்கி யாச்சு
விரும்புகின்ற வேட்பாளர் எங்கும் காணோம்!
வீணாகிப் போய்விடுமோ மக்கள் ஆட்சி?

பணம்கொடுத்தே வாக்குகளை விலைக்கு வாங்கி
பதவிதேடும் போக்கிங்கு பழகிப் போச்சு!
மனம்கெடுக்கும் நடிகனிடம் மதியும் மங்கி
மாற்றமதைத் தந்திடுமோ? வாக்கு வங்கி.

வானத்தை வில்லாக வளைப்பேன் என்றே
வாக்குறுதி வானளவு அள்ளி வீசி,
தானத்தை தன்னலத்தால் தருதல் போன்றே
தந்திடுவார் தருபொருளும் தேர்தல் அன்றே!

மணலைத்தான் கயிறாகத் திரிப்பேன் என்று
மனமறிந்து பொய்களையே முழக்கிப் பேசி,
கனலைத்தான் சொல்லாக்கி களத்தில் வென்று
காட்டிடுவார் கொள்கைதான் வென்ற தென்று.

கல்லில்நான் நாரும்தான் உரிப்பேன் என்று
கடலளவு வாக்குறுதி கயமை பூசி,
வெல்லம்போல் இனிக்கத்தான் சொல்வார் இன்று
விளைந்திடுமோ? நாட்டில்தான் நல்ல தொன்று!

நல்லவர்கள் தேர்தலிலே நிற்கும் காலம்
நல்லெண்ணம் நமக்கிருந்தால் வந்தே தீரும்!
வல்லவர்கள் வந்திடுவார் வைரம் போலும்
வழங்கிடுவார் ஒளியெனவே வாய்மை ஆளும்!

கவிதை
மரு. த.இராசலிங்கம்



## நெஞ்சமே அஞ்சாதே நீ! 

டாக்டர். எம்.எஸ்.உதயமூர்த்தி

நமக்கு முன்னால் வாழ்ந்தவர்கள் சமுதாயத்தைப் பல சாதிகளாகப் பிரித்து, சில கட்டுத் திட்டங்களை வகுத்து மக்களைப் பாகுபாடு செய்தார்கள். நமது சாதிப் பாகுபாடு போல் உலகில் வேறெங்கும் கோட்பாடுகள் மனித சமுதாயத்தை ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு இப்படி நெருக்கியதில்லை. கட்டுப்பாடுகள் மனிதனின் சுதந்திரத்தைப் பறித்துவிடுகின்றன. மனிதனின் ஆக்க சக்தியை முடக்கிவிடுகின்றன. ஒரு குறிப்பிட்ட சாதியினர், சில விடயங்களைச் செய்யக்கூடாது, வேறு சிலர், தெருக்களில் நடக்கக் கூடாது, தண்ணீர் மொள்ளக் கூடாது என்று மனித செயலை - இயல்பை - முடக்கி விடுகிறோம். மனித மனம் முடக்கப்படுகிறது. அவர்களையெல்லாம் தாழ்த்தப்பட்டோர் என்று சொல்வதற்குப் பதில் முடக்கப்பட்டோர் என்று சொல்வது பொருத்தமாக இருக்கும். எப்படி மனிதன் முடக்கப்படுகிறான்? மேலேயுள்ள ஒரு வலுவான மனிதன் பயமுறுத்திக் கீழே உள்ளவனை முடக்குகிறான். கீழே உள்ளவன் தனது பயத்தினாலும், அறியாமையினாலும், அதை ஆண்டவன் கட்டளை என்று ஏற்றுக் கொள்ளும்போது தன்னைத்தானே முடக்கிக் கொள்கிறான்.



இதில் யார் தவறு அதிகம் என்று மனநூலார் ஆராய்ச்சி செய்யும்போது "பயந்துபோய் ஏற்றுக் கொண்டவனே ஆண்மையற்றவன்" என்று கருதுகின்றனர்.அப்படியொரு சூழ்நிலையில் தோன்றி, சாதிச் சடங்குகளை எல்லாம் எதிர்த்த பெரியாரின் துணிச்சல், கற்பனையை எண்ணிப் பாருங்கள்.

## நண்பர்கள் எதற்காக? 

முனைவர்.லெ.பாஸ்கர்

நம் வாழ்க்கைப் பயணத்தில் நண்பர்கள், தோழிகள் எதற்காக வேண்டும்? இந்தப் பிரபஞ்சம் நமக்காகக் கொடுத்துள்ள கொடைதான் நாம் பெற்றுள்ள நண்பர்கள். சிலசமயம் நம் பேச்சுத் துணைக்கு நண்பர்கள் தேவை. காலையில் நடைப்பயிற்சி செல்வதற்கும் நண்பர்கள் தேவை. நல்லது..கெட்டது சொல்ல நண்பர்கள் சிலர் தேவை. அறிவுரை வழங்குவதற்கும், அனுபவத்தைப் பகிர்ந்து கொள்வதற்கும் கட்டாயம் நண்பர்கள் தேவை. தட்டிக் கொடுக்கவும் நண்பர்கள் தேவை, தவறான வழியைத் தடுத்து நிறுத்தவும் நண்பர்கள் தேவை. உதவி என்றால் ஓடோடிவரவும் நண்பர்கள் தேவை, வளம் குறைந்த காலத்தில் தாங்கிப் பிடிக்கவும் நண்பர்கள் தேவை. மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ள, வேதனையைப் புரிந்து கொள்ள நண்பர்கள் தேவை. சிலசமயம் பொறுப்புமிக்க நண்பர்களும், பொறுமைமிக்க நண்பர்களும் தேவை.

வாழ்க்கையில் மிகமிக இன்றியமையாத ஓர் உறவு நட்பாகும். உலகின் சிறந்த உணர்வுகளில் மேலானது எது தெரியுமா? உங்களால் ஒருவர் மகிழ்ச்சியாக இருக்கிறார் என்று நீங்கள் உணர்வதுதான் அது! வாழ்க்கை என்பது எல்லோரையும் மகிழ்விப்பது அல்ல, யாரையும் காயப்படுத்தாமல் வாழ்வதே முக்கியமானது. உண்மையான நட்பு, மகிழ்ச்சியைத் தருவதோடு உங்களை காயப்படுத்துவதில்லை. அப்படிப்பட்ட நண்பர்கள் வாய்ப்பது தானாக அமையவில்லை என்றாலும், உங்களால் தேர்ந்தெடுத்துக் கொள்ள முடியும்.

நல்ல நண்பர்கள் வாய்க்கப் பெற்றவர்கள், குறைபட்டுப் போவதில்லை. நிறைவான வாழ்வின் திருப்தியை அவர்கள் ஒவ்வொரு நிமிடமும் அனுபவிக்க முடியும்.

நல்ல நட்பு மலரட்டும்! வாழ்க்கை மணம் வீசட்டும்!

சென்ற இதழ் தொடர்ச்சி....

## 2.விட்டுக்கொடுத்து வாழுங்கள்!

ஒரே மாதிரியான உள்ளம், சிந்தனை கொண்ட இருவரை உலகில் எங்கும் காண முடியாது. இருவரின் உள்ளமும் வேறு வேறு, அதன் உணர்வுகளும் வேறு வேறு. அதுதான் இயற்கை. நமக்கு நிறையெனத் தோன்றுவது பிறர்க்கு குறையெனத் தோன்றலாம். சுவை உள்ளிட்ட புலன்களின் நுகர்ச்சியிலே மனிதர்க்கு மனிதர் வேறுபாடு இருக்கும்போது, உள்ளத்து உணர்ச்சியில் மாறுபட்ட நிலை இருப்பது இயல்பானதே! அவற்றையெல்லாம் குற்றம் எனக் கொள்ளாது, அப்படியே ஏற்றுக்கொண்டு வாழ்வதில்தான் இல்லறத்தின் இனிமையே அடங்கியுள்ளது. ஆனால், கணவனும் மனைவியும் உள்ளத்தால் ஒன்றுபட்டு வாழமுடியுமா என்றால்...முடியும். அதற்கு விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை வேண்டும். அது எப்பொழுது வாய்க்கும்?. உரிமையுடன் கூடிய அன்பில்தான் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை மலர முடியும்.

ஒரு பெண்ணுக்கு நூற்றுக்கு நூறு அவளின் விருப்பத்துக்கும், எதிர்பார்ப்புக்கும் ஏற்றவாறு ஒரு மணவாளன் அமைவதும், அதேபோல் ஓர் ஆணுக்கு அவன் விரும்புவது போல், எதிர்பார்ப்பது போல் ஒரு மணவாட்டி அமைவதும் எளிதானதல்ல. ஆகவே, இல்லறத்தில் இணையும்போது சில நேரங்களில் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து வாழ வேண்டியதிருக்கும்.

திருமணமான அடுத்தநாள், மனைவி காஃபி போட்டுக்கொண்டு வருகிறாள்; சர்க்கரை போட மறந்து விடுகிறாள். காஃபியை ஒருவாய் பருகியவுடன், கணவனின் முகம் மாறுகிறது. காஃபியா இது? கசாயம் போல் இருக்கிறது என்றவாறு “தூ” என்று துப்பினால் எப்படியிருக்கும்? மனைவியின் மனம் அந்தக் காஃபியை விடக் கசப்பாகிவிடும். மாறாக, உன் கையால் கொடுத்தால் சர்க்கரை போடாத காஃபி கூட இனிக்கிறதே! என்று சிரித்துக் கொண்டே சொன்னால் எப்படியிருக்கும் என்பதைக் கொஞ்சம் கற்பனை செய்து பாருங்கள். சர்க்கரை போட மறப்பது ஒன்றும் பெரிய குற்றமல்ல. அதைப் பெரிய குற்றமாகக் கருதி கடுஞ்சொற்களைக் கூறுவதுதான் குற்றமாகும். ஆனால் சிறு தவறைக் கூட நாகரிகமாக உரைக்கும் ஒரு சொல், விட்டுக் கொடுக்கின்ற குணத்தில் பிறக்கும் ஒரு சொல், சூழ்நிலையை இனிமையாக்குகிறது.

இலக்கியம் மீதோ, கலைகளின் மீதோ கணவனுக்கு இருக்கின்ற ஆர்வம் மனைவிக்கோ, மனைவிக்கு இருக்கின்ற ஆர்வம் கணவனுக்கோ இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை. இருவரின் ஆர்வம், நாட்டம் வேறுபடலாம். திருமணம் செய்து கொள்வதற்கு முன்பு இந்தப் புரிதல் இருக்க வேண்டும். திருமணத்துக்குப் பிறகு ஒருவரின் ஆர்வத்தை - கொள்கையை மற்றவர் மீது திணிக்கவோ, வற்புறுத்தவோ கூடாது.

..........இல்லறம் தொடர்ந்து இனிக்கும்

**தமிழ் அறம் மின்னிதழ்**
**வெளியிடுபவர் : மருத்துவர்.த.இராசலிங்கம். MBBS.,Dip.Diab**
**4/16, இராம் நகர். தூத்துக்குடி.**

# சங்க இலக்கியத்தில் உவமையழகு
# கலித்தொகை -- நெய்தற்கலி

கடல், கடல் சார்ந்த இடங்களில் வாழும் மக்களின் வாழ்வியலை எடுத்துக்காட்டும் இலக்கியம் நெய்தற்கலியாகும். கடலை வென்று, கடல் வளத்தைக் கொண்டு வாழ்ந்தவர்கள் அவர்கள். அவர்களிடையே எழுந்த காதல் நிலை, உள்ளத்து உணர்வுகளை அழகுடனும், செறிவுடனும் அறியத்தருவது நெய்தற்கலி. திமிலேறிக் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற கணவன் குறித்த பொழுதில் வராதபோது, மனைவி எதிர்பார்த்துக் காத்திருக்கும் இரங்கலும், இரங்கல் நிமித்தமாகத் தோன்றிய இலக்கியம் நெய்தற்கலி.

மாலைப்பொழுதும் வந்துவிட்டது. கடலுக்குச் சென்ற கணவன் கரை திரும்பவில்லை. கடல்அலை போல் தலைவியின் மனம் கொந்தளிக்கிறது. கணவன் அருகில் இல்லாத மாலைப்பொழுதை அவள் சாடுகிறாள். எப்படித் தெரியுமா? இந்த மாலைநேரமானது தன் கையிலே வாள் கொண்டுவந்து என் உடலிலிருந்து உயிரை பிரித்தெடுக்கின்றதே! என்கிறாள். **மாலை வாள் கொள.....மகளிர் உயிர் பொதி அவிழ்க்கும்**...என்று மாலைப்பொழுதைப் பழிக்கின்றாள்.

மாலைப்பொழுது என்பது, கதிரவன் மறைந்த பிறகு ஆறு மணியிலிருந்து இரவு பத்து மணி வரையிலானதாகும். அந்த நேரத்தில் மரங்கள் தூங்குகின்ற அழகைப் புலவர் எப்படி உவமையழகோடு கூறுகிறார் பாருங்கள். பொதுவாக ஒருவர் நம்மைப் புகழ்ந்துப் பேசினால் நாம் கொஞ்சமாவது தலைநிமிர்த்திக் கர்வம் கொள்வோம். ஆனால் பக்குவப்பட்டவர்கள் பிறர் தன்னைப் புகழும்போது, பணிவோடு தலைதாழ்த்தி நிற்பார்கள். அவர்களைப் போல் மரங்கள் தலைதாழ்த்தி தூங்குகின்றன என்கிறார்.

**தம் புகழ் கேட்டார் போல் தலை சாய்த்து மரம் துஞ்ச**, என்ற கற்பனை, பண்புள்ளவர்களின் அடக்கத்தையும் பறைசாற்றுவதாக உள்ளது.

மாலைப்பொழுதில் இருள் பரவ, பரவ தலைவியின் நெஞ்சம் மேலும் வாட்டமுறுகிறது. அதனால் இருளைப் பழிக்கின்றாள். எவ்வாறு இருளைப் பழிக்கிறாள்?.

**அருள் தீர்ந்த காட்சியான், அறன் நோக்கான், நயம் செய்யான்,**
**வெருவுற உய்த்தவன் நெஞ்சம் போல், பைபய**
**இருள் தூர்பு,........**

அதாவது அருள் முழுவதுமே அற்றுப் போனது போன்ற தோற்றம் கொண்டவன், அறத்தை ஏறெடுத்தும் நோக்காதவன், நல்லது எதையும் செய்யாதவன், எல்லோரும் அஞ்சுமாறு செயல்களைச் செய்பவன் நெஞ்சம் போல் இருள் வந்ததே! என்று புலம்புகிறாள்.

மேலும், வெள்ளத்திடையே அகப்பட்டுத் தவிக்கும் மானின் நிலை கண்டு இரங்காமல், அதனைக் கொல்லக் கணை தொடுக்கும் கொடியவனைப் போல், நீயும் வந்தாயோ? என்று வருத்தமுற்று நிற்கிறாள்.

**வெள்ள மான் நிறம் நோக்கிக் கணை தொடுக்கும் கொடியான் போல்,**
**அல்லற்பட்டு இருந்தாரை அயர்ப்பிய வந்தாயோ**? என்று உவமையழகுடன் தலைவியின் மனநிலையை எடுத்தியம்புகிறார் புலவர்.

....உவமையழகு தொடரும்

மரு.த.இராசலிங்கம்

# மக்கள் சக்தி இயக்கம்
# வாக்காளர் விழிப்புணர்வு பரப்புரை

**பண்புள்ள வாக்காளப் பெருமக்களே!**

- **தேர்தல், அரசியல் கட்சிகளுக்கானது மட்டுமல்ல; மக்களாகிய நாம்தான் தேர்தல் மூலம் ஆட்சியமைக்கின்றோம்.**

- **மன்னராட்சியில் நல்லாட்சிக்கு மன்னர் பொறுப்பு, மக்களாட்சியில் நல்லாட்சிக்கு மக்கள்தானே பொறுப்பு?**

- **மக்களின் சிந்தனைகள் சீரானதாக இருந்தால், அமைகின்ற ஆட்சி நேரானதாக இருக்கும்.**

- **வாக்களிக்க வேண்டுமென்ற அக்கறை உங்களுக்கு இல்லையென்றால் கட்சிகளுக்கு உங்கள் மேல் அக்கறை இல்லாமல் போய்விடும்.**

- **வாக்குச் சாவடியில் நீங்கள் எடுத்துவைக்கும் காலடி நல்லாட்சி அமைவதற்கான முதல்படி!**

- **வாக்களிப்பது நமது குடியாட்சிக் கடமை! பாடுபட்டு பெற்ற உரிமை!. அதை வீணாக்காதீர்கள்!. தகுதியானவரைத் தேர்ந்தெடுக்க உங்கள் வாக்கைப் பயன்படுத்துங்கள்!**

- **எனது ஒரு வாக்கு என்ன மாற்றத்தை ஏற்படுத்தும் என எண்ணாதீர்கள்!. ஒரு வாக்கில் ஆட்சி கவிழ்ந்த கதை நமக்குத் தெரியும்.**

- **எனது வாக்கு விற்பனைக்கு அல்ல! அது என் உரிமை! என்ற பெருமிதத்தோடு, காசு, பணம் எதிர்பார்க்காமல் கண்ணியத்துடன் வாக்களிப்போம்!**

| | | |
|---|---|---|
| மரு.த.இராசலிங்கம்<br>தலைவர். தூத்துக்குடி | முனைவர்.லெ.பாஸ்கர்<br>பொதுச்செயலாளர். தஞ்சை | கே.சி.நீலமேகம்<br>பொருளாளர்.திருச்சி |
| துணைத்தலைவர்கள் | முனைவர்.க.பெரியசாமி<br>பெரம்பலூர் | வழக்கறிஞர்.அ.அசோகன்<br>மதுரை |
| துணைச்செயலாளர்கள் | மு.சுகுமார்<br>கரூர் | இரா.இளங்கோ<br>திருச்சி |

# புலம்பல் குப்பைகள்

துன்பக்கணைகள்
சுமக்கும் உள்ளம்...

சோகமே
வடிவான இல்லம்!

காலத்தை
எப்படி வெல்லும்?

எந்த
சாதனைப் படைக்க...

என்னைப்
படைத்தான்?

என்கிற
புலம்பல்கள்...

எல்லாம்
குப்பைகள்!

நம்பிக்கைத்
தெளிவோடு...

தும்பிக்கை
வலிமையோடு...

தோள்களில்
மலைகளோடு...

தோழா....
புறப்படு!

துணிவெனும்
துணையோடு!

கவி.கலியுகன் கோபி
சென்னை

# எங்கும் தமிழ் !

தேனமுது செந்தமிழை
தேர்ந்திங்கு கற்கட்டும்!
வானவர்க்கும் கொண்டுபோய்
வளர்தமிழைச் சேர்க்கட்டும்!

இன்னமுது இலக்கியங்கள்
இளையோர்கள் விரும்பட்டும்!
கன்னலென கனிச்சுவையாய்
கற்றுமனம் திருந்தட்டும்!

அயல்மொழியாம் ஆங்கிலத்தை
அளவோடு அறியட்டும்!
பயில்மொழியாய் தமிழைத்தான்
பள்ளியிலே படிக்கட்டும்!

கயல்விழியால் கன்னியரும்
காளையரைக் காணட்டும்!
மயில்எழிலாள் மங்கையரும்
மறத்தமிழில் மருகட்டும்!

மழலைமொழிப் பேச்செல்லாம்
மாத்தமிழில் ஒலிக்கட்டும்!
பழைமையான பைந்தமிழில்
பாடங்களைப் பயிலட்டும்!

நிழலுக்கு மரமாக
நின்றுதமிழ் வளரட்டும்!
தழலுக்குள் ஒளியாக
தண்டமிழும் புலரட்டும்!

தமிழ்படித்த மாந்தருக்கே
தரும்வேலை வாய்க்கட்டும்!
சிமிழ்அடைத்த சிறுகாற்றாய்
செருபகையும் சாய்க்கட்டும்!

அமிழ்தம்என் றிருப்போர்க்கு
அருந்தவமாய் ஆகட்டும்!
இமிழ்கடலின் பேரொலியாய்
எம்தமிழே ஆளட்டும்!
( மறுபதிப்பு)

மரு.த.இராசலிங்கம்